பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 121

வியாழக்கிழமை
27 மார்ச் 2025

பங்குனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

ஏப்ரல் மூன்று முதல்

## வடக்கில் கனமழை!

யாழ்ப்பாணம், மார்ச் 27
ஏப்ரல் மாதம் 3ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கன 11

இனப்படுகொலைக்கு எதிரான

# பிரிட்டனின் நடவடிக்கை ஒருதலைப்பட்சமானதாம்

இராணுவத்துக்கு ஆதரவாக
அநுரவின் அரசாங்கம் குரல்



**கொழும்பு, மார்ச் 27**
**ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னாள் படைத்தளபதிகள் மற்றும் கடற்படையின் முன்னாள் தளபதி ஆகியோருக்கு எதிராக பிரிட்டனால் விதிக்கப்பட்டுள்ள தடை ஒருதலைப்பட்சமான நடவடிக்கையே என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.** 12

இராணுவ அதிகாரிகளுக்கான

## இராஜதந்திரத் தாக்குதல்தான் பிரிட்டன் விதித்துள்ள தடை!

கொழும்பு, மார்ச் 27
ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு பிரிட்டனால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை, ஓர் இராஜதந்திரத் தாக்குதலாகும் என்று இலங்கையின் இராஜதந்திரியான தயான் ஜயதிலக தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் 11

## வாக்குகளுக்கான அரசியலே இராணுவத்தினர் மீதான தடை

பிரிட்டனைச் சாடுகின்றார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 27
இலங்கையின் முன்னாள் படைத்தளபதிகளுக்கு எதிராக பிரிட்டனால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வாக்குகளை மையப்படுத்திய நடவடிக்கைகளே என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். 11

மன்னார் பிரதேசசபை;

## 11 தரப்பினர் கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 27
மன்னார் பிரதேசசபைக்கான தேர்தலுக்காக 11 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என்று 11

பூநகரிப் பிரதேசசபை;

## 10 தரப்புகள் கட்டுப்பணம்!

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி பூநகரி பிரதேசசபைக்கான தேர்தலுக்காக 10 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட உதவித் 11

## தென்னக்கோன் நீக்கம்; ஏப்ரல் 9இல் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 27
பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவிநீக்கம் செய்யக்கோரும் பிரேரணை ஏப்ரல் 11

## காணிப்பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு!

» 05

## அரசமட்டப் பேச்சுக்கு மீனவர்கள் விருப்பம்!

நேற்றைய பேச்சில் தகவல்

வவுனியா, மார்ச் 27
இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையிலான கடற்பதற்றம் தொடர்பில் தீர்வைக் காண்பதற்காக, வவுனியாவில் நேற்று நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையின்போது, அரச 11

## சலுகையில் உணவுகள்!

கொழும்பு, மார்ச் 27
சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு தகுதியுடைய பயனாளர்களுக்கு அத்தியாவசிய 12

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம் வேலணைப் பகுதியில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த 11



## அரச பல்கலைக்கழகங்களில் பொது உளச்சார்புப் பரீட்சை!

மாணவர்கள் எதிர்த்துப் போராட்டம்
பொலிஸார் குவிக்கப்பட்டு குழப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
அரச பல்கலைக்கழகங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பொது உளச்சார்புப் பரீட்சையை சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பரீட்சை எமக்குத் தேவையற்றதொன்று என்று தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீட முன்றலில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களின் இந்தப் போராட்டம் யாழ்ப் 11



‘அவைக்குத் தடைவிதிச்சா இவை என்னத்துக்குப் பதறுகினமெண்டு விளங்கேலையே’

## குடும்பப்பெண் விபத்தில் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 27
முழங்காவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4029 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 15 16 47 52 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1096 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 06 27 39 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0055 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 2 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2135 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 29 37 62 79 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5787 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 7 9 4 6 8 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1817 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 19 22 60 67 |
| விசேட எழுத்து | N |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 26.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0362 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 4 6 8 0 |

# படையினர் மீதான தடை; நீதிக்கான ஒளிக்கீற்று!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 27**

**இலங்கையில் தமிழர்கள் மீதான இனஅழிப்புப் போரில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையினர் நால்வர் மீது பிரிட்டன் விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று. இதனை நாம் வரவேற்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாக இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத் தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கிறது.

இலங்கையில் குறிப்பாக வடக்கு- கிழக்குத் தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடை சர்வதேச நீதிகோரும் பயணத்தில் தமக்குக் கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள். தமிழ்த்தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது - என்றுள்ளது. (ச-27,66)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 26.03.2025 | புதன்கிழமை | 0495 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| L | 7 0 3 0 1 0 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.03.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2761 | N | 03 08 37 60 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 02 20 26 34 | 4922 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.03.2025 | புதன்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 17 21 40 49 | 4473 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 26.03.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 34 | 18 59 68 72 | 1937 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 14 15 34 36 | 2587 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 26.03.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 20 27 45 67 | 2115 |

# படையினர்மீது தடை தீவிரவாதத் தூண்டல்

## விமல் கொதிப்பு

கொழும்பு, மார்ச் 27

பிரிட்டன் எமது படைத்தளபதிகளுக்கு விதித்த இந்தத் தடைகள் மனித உரிமைகளை முன்னேற்றுவதில்லை, மாறாக தீவிரவாத நோக்கங்களையே முன்னேற்றுகின்றன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிட்டனுடன் இருக்கும் இராஜதந்திரத் தொடர்புகளைப் பயன்படுத்தி இந்தத் தடைகளை நீக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-சி)

## வேட்புமனு நிராகரிப்பு

# உச்சநீதிமன்றை நாடிய தமிழ் மக்கள் கூட்டணி

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண மாநகரசபை உள்ளிட்ட உள்ளூராட்சிசபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தமிழ் மக்கள் கூட்டணி உச்சநீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஊடாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உச்சநீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபையில் , முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனை முதல்வர் வேட்பாளராகக் கொண்டு களமிறங்கிய தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனுவே நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# போர்க்குற்றவாளிப் பட்டம் படையினர்மீதான வீண்பழி

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

பிரிட்டன் எந்த விசாரணையின் அடிப்படையில் எமது படையினரை போர்க்குற்றவாளிகளாக அறிவித்துள்ளது? என்று பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான உதயகம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் படைத்தளபதிகளான சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட, ஜகத் ஜயசூரியா மற்றும் கருணா ஆகியோருக்கு பிரிட்டன் விதித்த தடைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

எமது படையினரைப் போர்க்குற்றவாளிகளாக அறிவிக்கும் முன், அவர்களுக்கு தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை.

உலகில் உள்ள எல்லாத் தீவிரவாதத் தலைவர்களுக்குப் பிரிட்டன் அடைக்கலம் வழங்குகின்றது.

மாறாகத் தீவிரவாதத்தை அழித்த படையினரைப் போர்க்குற்றவாளிகளாக அறிவிப்பது எந்தவகையில் நியாயமென்பதை பிரிட்டன் உலகுக்கு விளக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (ச-சி)

# சர்வதேச நீதிமன்றத்துக்கான முதற்படியே பிரிட்டன் தடை!

## சத்தாதிஸ்ஸ தேரர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 27

படையினரை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே பிரிட்டனால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசாங்கம் அடிபணியக்கூடாது என்று ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிரபாகரன் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த தமிழ் மக்களை மீட்பதற்காகவே படையினர் மனிதாபிமான நடவடிக்கையை முன்னெடுத்தனர். அதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை மஹிந்த ராஜபக்ச வழங்கினார்.

படையினர் தற்போது குறிவைக்கப்பட்டுள்ளனர்.

படையினரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டுசென்று, மின்சாரக்கதிரையில் அமரவைப்பதற்குரிய நடவடிக்கையின் ஆரம்பக் கட்டமாகவே இந்தத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அரசாங்கம் அடிபணிந்தால் படையினரையும், அரசியல் தலைமைத்துவத்தை வழங்கியவர்களையும் சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வதை தடுக்கமுடியாமல்போகும் -என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியமின்கலக் கொடுப்பனவு குறைக்க அரசு நடவடிக்கை

## சூரிய மின்சக்தித்துறையினர் கடும் எதிர்ப்பு

**கொழும்பு, மார்ச் 27**

**வீடுகளில் பொருத்தப்படும் சூரிய மின்கலங்களுக்கான கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்து அமைச்சரவைப்பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளது.**

அமைச்சரவை அனுமதி கிடைக்கும்வரை தற்போது நடைமுறையிலுள்ள கட்டணமாக ஒரு அலகுக்கு 27 ரூபா அறவிடப்படும் என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய திருத்தங்களின்படி 20 கிலோவாட் வரையுள்ள சூரிய மின்சார அமைப்புகளுக்கு அலகு ஒன்றுக்கு 19 ரூபாவும், 20 முதல் 100 கிலோவாட் வரை உள்ள சூரிய மின் அலகொன்றுக்கு 17 ரூபாவும், 100 முதல் 500 கிலோவாட் வரை உள்ள சூரிய மின் அலகொன்றுக்கு 15 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கலாமென முன்மொழியப்பட்டுள்ளன. இந்த விலைத்திருத்தங்கள் ஏற்கனவே நிறுவப்பட்ட சூரிய மின்சார அமைப்புகளுக்கு பொருந்தாது எனவும் புதிதாக நிறுவப்படும் அமைப்புகளுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இந்த நடைமுறைக்கு சூரிய மின்சக்தித் துறையினர் கடும் ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளது. இது இலங்கையின் சூரிய மின்சக்தித் துறையைக் கடுமையாகப் பாதிக்கும் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

(ச-சி-41-6)

# கல்வியை இடைநிறுத்திய 3.5 மில்லியன் மாணவர்கள்

கொழும்பு, மார்ச் 27

பாடசாலை மாணவர்களில் மூன்றிலொருவர் பாடசாலை செல்வதில்லை என ஆய்வுகள் தெரிவிப்பதுடன் 10 -19 வயத்துக்கிடைப்பட்ட மாணவர்களில் சராசரியாக 3.5 மில்லியன் மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை எனச் சுகாதார மற்றும் ஊடகப் பிரதியமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

ஐந்திலொரு மாணவர்கள் (17.4 வீதம்) மது அருந்துகின்றனர். 28.5 வீதமானோர் அதிகளவு சீனி சேர்க்கப்பட்ட குளிர்பானங்களை அருந்துகின்றனர். 28 வீதமானோர் நொறுக்குத்தீன்களை உண்ணுகின்றனர்.13- 17 வயதுக்கிடைப்பட்டோரில் 21.4 வீதமானோரிடையே நிறை கூடுதலாகவும் 12.1 வீதமானோரிடையே நிறை குறைவாகவும் காணப்படுகிறது. 12.8 வீதமானோர் புகைபிடிக்கின்றனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(ச-25, 6)

# ஏற்றுமதி வளர்ச்சி

கொழும்பு, மார்ச் 27

2025 பெப்ரவரி மாதத்தில் மொத்த ஏற்றுமதிப் பொருளாதாரம் 4.62 வீதம் காட்டுகிறது என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி 2.58 வீதம் மாதாந்த வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

2025 பெப்ரவரி மாதத்தில் சேவைகளின் ஏற்றுமதி 326.14 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2024 இன் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 24.37% வளர்ச்சியைக் காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மயிலிட்டித் துறைமுகம் விரைவில் பாவனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

மயிலிட்டித் துறைமுகம் விரைவில் மீனவர்களின் பாவனைக்குக் கையளிக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட 124 இழுவைமடிப் படகுகள் மயிலிட்டியில் தரித்துவிடப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவதற்கு தற்போது நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். காரைநகர் மற்றும் ஏனைய இடத்துக்கு அதனை மாற்றத் தீர்மானித்துள்ளோம். இதன்மூலம் மயிலிட்டித் துறைமுக மீனவர்கள் இடையூறின்றித் தொழிலில் ஈடுபடலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-125)



# கோப்பாயில் 9 குரங்குகள் 73 மயில்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பயிர்ச்செய்கையைப் பாதிக்கும் கணக்கெடுப்பில் கோப்பாய்ப் பிரதேசத்தில் 9 குரங்குகள், 73 மயில்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக நேற்று நடைபெற்ற கோப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் விவசாயப் பயிர்களைப் பாதிக்கும் உயிரினங்கள் பட்டியலிடப்பட்டு அதன்மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. சிலவேளை இன்னமும் குரங்குகள் அடையாளம் காணப்படலாம் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ச-125)

# புதிய ஊழல் எதிர்ப்புத்திட்டம் அரசாங்கத்தால் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 27

2025 - 2029 ஆம் ஆண்டிற்கான புதிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டத்தை இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் 2025 -2029 ஆம் ஆண்டுக்கான புதிய தேசிய ஊழல் எதிர்ப்புச் செயற்றிட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் முந்தைய செயற்றிட்டத்தை (2019-2023) அடிப்படையாகக் கொண்டதுடன் சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தரநிலைகளுடன் ஒத்துப்போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொள்கை செயற்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்பார்வையிட இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பங்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)




ஆமிக்காரருக்கும் அரசாங்கத்துக்கும் எட்டாப் பொருத்தமெண்டு, தையிட்டி விகாரைச் சம்பவத்தோட சேர்த்து பட்சி நேற்றுச் சொன்னதெல்லோ. அந்த எட்டாப்பொருத்தம் தனியே ஆமிக்காரரோட மட்டுமில்லையாம். நேவிக்காரரும் திசைகாட்டி அரசாங்கத்தோட கடும் கறுவியத்திலதான் நிக்கினமாம். எப்பிடி ஆமிக்காரர் அரசாங்கத்தின்ர சொல்வழி கேளாமல் தங்கட பாட்டுக்கு தையிட்டியில ஆடிச்சினமோ அப்பிடித்தான் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில நேவிக்காரர் தாங்கள் நினைச்சபடிதான் நடந்திருக்கினம்.

கே.கே.எஸ். துறைமுகத்தில இருந்து கச்சதீவுக்கு ரண்டரை மணித்தியாலத்தில போகக்கூடிய கப்பல் ஒண்டு நிக்குது. அந்தக் கப்பலில அதிகாரிமாரும், அமைச்சர்மாரும், ஆக்களும் கச்சதீவுக்குப் போறதுக்காக ஒழுங்கு செய்துதரச்சொல்லி,கடற்றொழில் அமைச்சரும், யாழ்ப்பான ஜீ.ஏ.யும் கேட்டவையாம். ஆனால் அதுக்கு நேவிக்காரர் 'எங்களுக்கும் அப்பிடிச் செய்ய விருப்பம்தான். ஆனால் அந்தக் கப்பல் பழதாப்போய், இப்ப திருத்திறதுக்காக கொழும்புக்கு அனுப்பிட்டம்' எண்டு கைவிரிச்சுப் போட்டினம். அதால வடதாரகையையும், மிச்சமிருந்த சின்னச் சின்ன படகுகளையும் வைச்சுத்தான் எல்லாரையும் கச்சதீவுக்கு ஏத்தி இறக்கினவை. திடீரெண்டு பார்த்தால், எந்தக் கப்பல் பழுதாப்போய் ஓடேலாமல் நிக்குதெண்டு நேவிக்காரர் சொல்லிச்சினமோ, அந்தக்கப்பலிலதான் மீடியாக்காரரும் இன்னும் கொஞ்சப்பேரும் கச்சதீவுக்கு போயிருக்கினம். அதைவிட அந்தக் கப்பல் கச்சதீவுக்கும், கே.கே.எஸ்ஸுக்கும் மூண்டு நாலுதரம் இந்த முறை ஓடியிருக்கு.

அப்ப கப்பல் பிழைச்சுப்போய் நிக்குதெண்டு அமைச்சருக்கு நேவிக்காரர் ரீல் விட்டிருக்கினம். முந்தின அமைச்சர்மாரெண்டால் 'என்னெண்டு பழுதாப்போட்டுதெண்டு சொல்லிப்போட்டு இப்ப மட்டும் கப்பல் ஓடினது?' எண்டு நேவிக்காரரின்ர கொலரைப் பிடிச்சுக் கேட்டிருப்பினம். ஆனால் இப்பத்தைய அமைச்சர் ஆத்திரப்படாமல், விசயத்தை மேலிடத்துக்கு சொல்லியிருக்கிறாராம். ஒரு கடற்றொழில் அமைச்சருக்கே இப்பிடி நேவிக்காரர் விளையாட்டுக் காட்டுகினம் எண்டால், மிச்சத்தை சொல்லத் தேவையில்லை. எண்டாலும் தலையை மேவி வால் முளைச்சால், தலைக்குத்தான் கூடாது. எதுக்கும் இப்பவே அவைக்குப் பாடமெடுத்து சொல்பேச்சுக் கேக்கவைக்கிற வேலையை அரசாங்கம் பாக்கோணும். இல்லாட்டி ஆமி ஒரு வழியிலையும், நேவி இன்னொரு வழியிலையும், அரசாங்கம் அதுக்கு எதிரான வழியிலையும் போனால் எல்லாமே கெட்டுக் குட்டிச்சுவராப் போடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமான விபத்து

பிரான்ஸ் விமானப் படையினர் நேற்றுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இரண்டு விமானங்கள் ஒன்றுடன்ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (ம)

## ஹமாஸ்களுக்கு எதிராகப் போர்!

பலஸ்தீனர்களில் ஒரு தரப்பினர், காசாவில் இருந்து ஹமாஸ் அமைப்பு வெளியேறிச் செல்ல வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் போர் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம)

# மரண அறிவித்தல்



## அருட்சகோதரி தியோவ்வின் அருளானந்தம் தி.கு

பாசையூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி தியோவ்வின் அருளானந்தம் தி.கு (24.03.2025) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (28.03.2025) வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணிக்கு பாசையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.

(CS7843) N-1

# NPHD 9596 இலக்க லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கேரரல்

எமது சங்கத்தின் நல்ல நிலையில் உள்ள NPHD 9596 இலக்க லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரப்படுகின்றது. சங்க காரியாலய நேரத்தில் லொறியினைப் பார்வையிட்டு பின்வரும் தொகைப்பணத்தை காரியாலயத்தில் செலுத்தி கேள்விக் கூறுவிலைக்கான விண்ணப்ப படிவத்தினை பெற்று எதிர்வரும் 14.04.2025 ஆம் திகதிக்கு முன் நேரடியாகாவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்படல் வேண்டும்.

கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்க முடியாதது) ரூபா 1000.00
கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்க கூடியது) ரூபா 5000.00
கேள்விக் கூறுவிலை தொடர்பாக சங்க இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்
வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி
பருத்தித்துறை வீதி,
புத்தூர்.

(CR 446678) A

# மரண அறிவித்தல்

## விஜயநாதன் தங்கமுத்து



மலர்வு 07.04.1937 உதிர்வு 22.03.2025

யாழ் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்து சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயநாதன் தங்கமுத்து அவர்கள் கடந்த (22.03.2025) சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லாச்சி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம். விஜயநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களன சந்திரசேகரம், இரத்தினம், செல்லமுத்து, வேலுப்பிள்ளை மற்றும் தேவரட்னம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமார் (UK), இரட்ணகுமார் (சுவிஸ்), ஜெயக்குமாரி (UK), உதயகுமாரி (கனடா), வனஜகுமாரி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபத்திரா (UK), புனிதமலர் (சுவிஸ்), சிவக்குமார் (UK), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் கேசவன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று 26.03.2025 10.am - 4.30 Pm வரை Kramatorium Nordheim, Kaferholzstrasse 101, 8046 Zurich. (Bucheggplatz) என்னும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டது. இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2025) வியாழக்கிழமை 9.00 am - 12.00 pm மணியளவில்Zurich இல் நடைபெற்று Kramatorium Nordheim, Kaferholzstrasse 101, 8046 Zurich. (Bucheggplatz) இடத்தில் தகனக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.Ratnakumar
Friedh of nordheim
8037 Zurich, Switzerland.

தகவல் : செல்வநாயகி, இரவீந்திரகுமார்
077 978 4286
(பெறாமகள்-உடுப்பிட்டி)

(CR/29623) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1942



இறப்பு 23 . 03 . 2025

## திருமதி மகாலெட்சுமி யோகராசா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் 6/1 பழம் றோட் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி யோகராஜா அவர்கள் கடந்த (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை நாகரட்னம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபை யோகராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, ரத்தினராஜா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மஞ்சுளவல்லி மற்றும் சௌந்தரராஜன், சியாமளா (ராஜி), சசிகலா, சிறீதரன் (கண்ணன் மேற்பார்வையாளர் யாழ்போதனா வைத்தியசாலை), நிர்மலா (மாலா), வத்சலா (செல்வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி, காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் தர்மராஜா, புஸ்பாஞ்சலி (கவிதா), தயானந்தம், புஸ்பராஜன் (சுரேஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வித்தியா, சிவசேந்தன், சம்ஷிஹா, பார்த்தீபன், கரீஸ், நிகேதன், நிரூபன் சைலன், சந்தோசிகா, பிரகின், சௌபர்ணிகா, ரிஷிதரன் மற்றும் ரிஸ்னிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் யுவன் ரிஷிகா மற்றும் சஸ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்று (26.03.2025) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் வைக்கப்பட்டது. இன்று (27.03.2025) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


| | |
|---|---|
| Sritharan | - 0094 754 248 709 |
| Soundararajan | - 0094 774 007 775 |
| Thayanantham | - 0064 210 267 2973 |
| Pushparajan (Suresh) | - 0044 750 757 0175 |
| Sasikala (Sasi) | - 0044 747 534 7654 |

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/2818) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 01 1950



மறைவு 26 03 2025

## ஏரம்பு தெட்சனாமூர்த்தி

யாழ்ப்பாணம் மண்கும்பானை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி (கின்னர் வீதி) யில் வசித்து வந்தவருமான ஏரம்பு தெட்சனாமூர்த்தி நேற்று (26.03.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சுப்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயசங்கர் (பிரான்ஸ்), லாவண்யா (கொழும்பு), விஜயசங்கர் (யாழ்ப்பாணம்), சத்தியசங்கர் (பிரான்ஸ்), அனுசுயா (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரபூபதி, காலஞ்சென்ற சாம்பனேஸ்வரி, காலஞ்சென்ற துரைராசா, செல்வ ராணி ஆகியோரின் சகோதரனும், நவரத்தினம், சாம்பசிவம், ரவீந்திரன், காலஞ்சென்ற கனகேஸ்வரி, சர்வேஸ்வரன், ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சுவிதா (பிரான்ஸ்), சிவாஜினி (யாழ்ப்பாணம்), வனஜா (பிரான்ஸ்), லதன்குமார் (சுவீடன்) மற்றும் அரசரத்தினம் (ஜேர்மன்), எழில்மதி (ஜேர்மன்), சுபாசினி (சுவிஸ்), துவாரகா (கனடா), யதுசன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், யசாங்கவி, சயானா, யதுனா, யபிசனன், யஸ்ரின், அணிகரா, ஒலிவியா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தவஞானலிங்கம்- விமலா தேவி, சிவலிங்கம்-அம்பிகாதேவி, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சந்திராதேவி, கந்தையா-சுபத்திரா ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2025) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| விஜயசங்கர் | (யாழ்ப்பாணம்) | - 0094776621811 |
| உதயசங்கர் | (பிரான்ஸ்) | - 0033768688996 |
| சத்தியசங்கர் | (பிரான்ஸ்) | - 0033968361216 |
| லாவண்யா | (யாழ்ப்பாணம்) | - 0094770037706 |
| அனுசுயா | (சுவீடன்) | - 0046704337785 |

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2820) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



## தடையின் பின்னுள்ள எச்சரிக்கை

பிரிட்டன் போட்ட தடையால் ஒட்டுமொத்த இனவாதிகளுமே கிலி பிடித்துப்போய், பிதற்றத் தொடங்கியுள்ளனர். முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய, கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்துசென்று படையினரோடு இயங்கிய கருணா (விநாயகமூர்த்தி முரளிதரன்)ஆகிய நால்வருக்கும் மின்னாமல் முழங்காமல் திடீரெனப் பயணத்தடை விதித்தது பிரிட்டன். அத்துடன் பிரிட்டனில் இந்த நால்வரும் சொத்துக்களை வாங்கவும், வைத்திருக்கவும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. சிலவேளை இப்போது இந்த நால்வரில் எவருக்கேனும் சொத்துகள் பிரிட்டனில் இருக்குமானால், அவை உடனடியாகவே அரசுடைமையாக்கப்பட்டுவிடும். இந்தத் தடையால் குறித்த நால்வருக்கும் புறவயமாக பெரியளவில் பாதிப்பில்லைத்தான். ஆனால், குறித்த தடையின் பின்னால் ஒளிந்திருக்கும் மறைமுக இராஜதந்திரம் ஒட்டுமொத்த இலங்கைக்கும் ஓர் அபாய எச்சரிக்கையை விடுக்கத் தவறவில்லை.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கான பிரிட்டன் அமைச்சர் கேத்தரின் வெஸ்ட் அண்மையில் இலங்கைக்கு வந்து, பல தரப்பினரோடும் கலந்துரையாடியிருந்தார். ஜனாதிபதி அநுரகுமார முதல் பொதுமக்கள் வரை வெவ்வேறு நிலைப்பாடு கொண்டோரைச் சந்தித்து அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்ததோடு, நேரடியாக களநிலைமையையும் அவர் அவதானித்துச் சென்று வழங்கிய அறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் தடையை பிரிட்டன் விதித்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. அத்தோடு இந்தத் தடை அறிவிப்புக்குப் பின்புலத்தில் பிரிட்டனின் வெளியுறவுச் செயலர் டேவிட் கமரூனே செயற்பட்டுள்ளார். பிரிட்டனின் பிரதமராக இருந்தபோது, 2013 இல் இலங்கைக்கு வந்த டேவிட் கமரூன், போர் நடைபெற்ற பிரதேசங்களுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களையும் நேரடியாகச் சந்தித்துச் சென்றவர். அப்போதே அவர் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு நீதிகிடைக்கவேண்டும் என்ற இதயசுத்தியோடு செயற்பட்டிருந்தார். ஆனால் பிரிட்டனின் உள்நாட்டு அரசியல் குழப்பங்களால், அவரால் அப்போதைக்கு இலங்கை விவகாரம் தொடர்பில் முழுமையாகச் செயற்பட முடியவில்லை. இப்போது அவர் பிரதமராக இல்லாவிட்டாலும், சர்வதேச விடயங்களைக் கையாளும் வெளிவிகார அமைச்சின் செயலராக , அதிகாரம் மிக்க பதவியில் இருப்பதால் தன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த விடயத்துக்கு கொஞ்சமேனும் நீதிகிடைக்கும் வகையில் இந்தத் தடையை அவர் கொண்டுவந்திருக்கிறார்.

பிரிட்டன் தடையுத்தரவுக்குள் சிக்கிய நால்வரும் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களோடு மட்டும் தொடர்புடையவர்கள் அல்லர். சவேந்திர சில்வாவுக்கும், ஜகத் ஜயசூரியவுக்கும் மட்டுமே இறுதிப்போர்க்குற்றத்தின் பாவங்கள் அத்தனையும் சேரும். கடற்படையின் முன்னாள் தளபதியான வசந்த கரன்னகொட, கொழும்பில் மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களின் சூத்திரதாரி. கருணாவைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. புலிகளை விட்டுப் பிரிந்தபின்னர், மிக மோசமான படுகொலைகளையும், வன்புணர்வுகளையும், கடத்தல்களையும் செய்வதற்கு கருணா ஒருபோதும் தயங்கியதில்லை. எனவே மனிதகுல விரோதச் செயற்பாட்டில ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த நால்வர் மீதும் பயணத்தடையை பிரிட்டன் விதித்துள்ளது. இது அந்த நால்வருக்குமான தடையாக மட்டும் எடுத்துவிட முடியாது. போர்க்குற்றங்களுக்கும், மனுக்குல விரோதச் செயற்பாடுகளுக்கும் வெளியகப் பொறிமுறை ஊடாகவோ அல்லது உள்ளகப் பொறிமுறை ஊடாகவோ பரிகார நீதியை இலங்கை பெற்றுக்கொடுக்கப் பின்னடித்தால், இந்தத் தடை முழுநாட்டுக்கும் எதிரானதாக விதிக்கப்படும் அபாயம் எழும். இலங்கையில் இறுதிப்போருக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த அத்தனைபேரும் பல்வேறு ஆணைக்குழுக்களை அமைத்தனர். அது தவிர ஜெனிவாவிலும் நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவற்றின் எந்தவொரு பரிந்துரைகளும் செயற்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக பிரிட்டனின் தடையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இனியும் அவ்வாறு நல்லிணக்க நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்காவிட்டால், இந்த நால்வர் மீதும் மட்டுமல்லாது ஒட்டுமொத்த இலங்கைக்கு எதிராகவும் இந்தத் தடையை பிரிட்டனும் ஏனைய நாடுகளும் விரிவாக்கக்கூடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உங்களிடம் எல்லையற்ற பொறுமையும், விடாமுயற்சியும் இருந்தால், வெற்றி நிச்சயம்வரும்.

– சுவாமி விவேகானந்தர்–




## வடக்கு- கிழக்கு காணிச் சிக்கலுக்கு விரைவில் தீர்வுகாண நடவடிக்கை

### பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 27**
**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
காணி ஆணையாளர் நாயகம் அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார். அங்குள்ள பல காணிகள் வன உயிரிகள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று வன உயிரிகள் திணைக்களம் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. ஆனால் அந்தக் காணிகளின் உறுதிகளைப் பொதுமக்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர். சிலர் தங்கள் காணிகளின் உறுதிகளை உறுதிப்படுத்தியுள்ளனர். இராணுவத்தால் சில காணிகள் கைவசப்படுத்தப்பட்டுள்ளன. போரால் வீடுகளை இழந்த பலர் இன்னமும் தங்களின் நிலங்களுக்காகப் போராடிவருகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு விரைவில் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள், வன உயிரிகள் திணைக்களத்தினர், வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் ஆகியோருடன் கலந்துரையாடி சுமூகமான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார். (எ-6)

## மருந்துகளுக்கு சில்லறை விலை

### வர்த்தமானி வெளியீடு



கொழும்பு, மார்ச் 27
மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை பொறிமுறையைச் செயற்படுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையைத் தீர்மானிக்கும் விலைச் சூத்திரம், அதிகபட்ச விற்பனை விலையைத் தீர்மானிக்கும் பொறிமுறை என்பவற்றை அறிவித்து இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.
இந்த அறிவிப்பை சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்டுள்ளார். (ச-இ)



## தேசபந்துவிடம் வாக்குமூலம்

கொழும்பு, மார்ச் 27
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.
தேசபந்து தென்னகோனை தடுத்துவைத்துள்ள தும்பர சிறைச்சாலைக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-சி)

## விமான விபத்தின் காரணம் தெரியாதாம்

கொழும்பு, மார்ச் 27
குருநாகல, பாதெனியப் பிரதேசத்தில் விமானப்படையின் பயிற்சி ஜெட் விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளானமை தொடர்பில் விவரங்களைத் திரட்டுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 7 பேர் கொண்ட விசாரணைக் குழுவே நியமிக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரே விமான விபத்துக்கான காரணம் தெரியவரும் என்று கூறப்பட்டுள்ளது. (ச-33-சி)

## 90 வீதமான பெண்களுக்கு போக்குவரத்தில் துன்புறுத்தல்

நாட்டில் 90 வீதமான பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது பொதுப் போக்குவரத்தின்போது பாலியல் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.
பாலின சமத்துவமின்மை குறியீட்டின்படி உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீட்டில் 146 நாடுகளில் இலங்கை 122 ஆவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது என்று கூறிய பிரதமர், இது பாலினம், இனம், மதம் மற்றும் வயதை தாண்டிய ஒரு சமூக சவால் என்றும் சுட்டிக்காட்டினார். (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை-பங்குனி- 14

28.03.2025

சுபநேரம் : 06.14- 07.44
ராகுகாலம் : 10.44 - 12.14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 – 2027

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருடகாலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார்.



**விருச்சிகம் (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய) எல்லோரிடமும் நல்ல பெயரை எளிதில் சம்பாதித்துவிடும் விருச்சிக இராசி அன்பர்களே!**

## விருச்சிகம்



நீங்கள் தோல்வியைக்கண்டு துவளாதவர். போராட்டகுணம் உடையவர். எதிலும் முயற்சிசெய்து வெற்றிகாணவேண்டும் என்று விரும்புபவர். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் பட்டம் பதவிகள் பெறுவீர்கள். திறமைகள் பல கொண்டவர்கள். இதுவரை உங்களது சுக ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் விலகி பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் களத்திரஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்** - பலவிதமான குழப்பங்கள் இருந்தும் திட சிந்தனைகளுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். வருமானத்தைப் பெருக்குவதற்கு நல்ல வழிகள் உதயமாகும். நிதி நெருக்கடிகள் ஏற்படலாம். குடும்பத்திலும் வெளி வட்டாரத்திலும் உங்கள் பேச்சுக்கு மதிப்பில்லாமல் போகலாம். எப்போதும் போல் சட்டத்தை மதித்து நடப்பீர்கள். இத்தன்மை, சில அன்பர்களுக்கு சாதகமான மேலிடத்துத் தொடர்புகளை உருவாக்கித்தரும். இல்லத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். நீங்கள் சார்ந்துள்ள துறையில் புகழின் உச்சியை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவீர்கள். அதேசமயம் கடினமாக உழைக்கவேண்டியிருக்கும். நண்பர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். உடலில் இருந்த நோய்கள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். எதையும் சிந்தித்துச் செயற்படவேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக்கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள். பந்தயங்கள், போட்டிகளிலும் வெற்றி வாகை சூடுவீர்கள். பெற்றோர் வழியில் நிலவிவந்த மனக் கஷ்டங்கள் தீர்ந்து, குடும்பத்தில் குதூகலம் நிறையும். நீங்கள் பிரபலம் ஆவீர்கள். உங்களை நாடி வந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். அதேசமயம் உங்களின் பொருளாதாரத் திட்டங்களில் சிறிது தொய்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சில நேரங்களில் மனம் நொந்து போவீர்கள். இருப்பினும் பொருளாதாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

சனி பகவானால் வாகனங்களுக்கு சிறிது பராமரிப்பு செலவுகள் செய்ய நேரிடும். உங்களின் நண்பர்கள், உங்களுக்குத் தேவையானவற்றைத் தவிர்த்துத் தேவையற்ற விஷயங்களைப் பேச நேரிடலாம். அதனால் எவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளாமல், உங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்திச் செயலாற்றுங்கள். உங்களின் வாழ்க்கையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவருவார். தேவையற்ற கவலைகள் உங்கள் மனதை விட்டு அகலும். உங்களின் அணுகுமுறையால் பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள்.

வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடுவீர்கள். அதனால் சிற்சில ஆதாயங்களும் ஏற்படும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**உத்தியோத்தர்கள்:** தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதேநேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். இச்சமயங்களில் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அலுவலக வேலைகள் தொடர்பான பயணங்களால் நன்மை உண்டாகும். பணவரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். எதிர்பாராத பதவி உயர்வால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போவீர்கள்.

**வியாபாரிகளுக்கு:** கடும் முயற்சிகளுக்குப் பின் தகுந்த இலாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தினாலும் கடன் சுமை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளவும். அரசியல்வாதிகளுக்குப் பெயரும், புகழும் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் பாராட்டப்படுவீர்கள். தொண்டர்களின் ஆதரவு, உங்களை உற்சாகப்படுத்தும். கட்சியில் புதிய பொறுப்புகளையும் பெறுவீர்கள். அவற்றை நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். மக்களுக்கு நன்மை செய்வதற்கான உங்களின் முயற்சிகளை எதிர்கட்சியினரும் பாராட்டுவார்கள். புதிய பயணங்களால் உற்சாகம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் குறைவாகவே இருந்தாலும் பணவரவு சீராகவே தொடரும். ரசிகர்களின் ஆதரவும் அமோகமாகவே இருக்கும். உங்கள் திறமையினால் புகழைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். உங்களின் கற்பனை சக்தி ஊற்றுப்போல் பெருகும். இது வருமானமாகவும் மாறி பயன் தரும்.

**பெண்களுக்கு:** கணவரின் அன்பும், பாசமும் அளவுக்கதிகமாகவே கிடைக்கும். ஆன்மீகச் சுற்றுலாவும், இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ச்சியடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறையும். பிள்ளைகளாலும் சந்தோஷம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். உழைப்பிற்கேற்ற மதிப் பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள். உழைப்புக் குறைந்தால் உயர்வும் குறையக்கூடும். ஆனால் பெற்றோர்களின் ஆதரவு உங்களை உற்சாகப்படுத்தும்.

# கூட்டத்தைப் புறக்கணித்த யாழ். கல்விப்பணிப்பாளர்

## சிறுவர்நலன்சார் விடயங்கள் இழுபறி

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுக்கூட்டத்தில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் பங்கேற்காமை தொடர்பாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுக்கூட்டம் அண்மையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோது சிறுவர்நலன்சார் விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் சமுகமளிக்காததனால் விசேட தீர்மானங்கள் எடுப்பதற்கு தாமதம் ஏற்பட்டது.

இந்தநிலையில் இனிவரும் காலங்களில் குறித்த வலய கல்விப் பணிப்பாளர் உட்பட கல்விசார் அதிகாரிகள் கட்டாயம் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் பணிப்புரை விடுத்தார். (ச- 125)

# பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 27

இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

# ‘மூச்சடங்கா இரவுகள்’ திரைப்பட இசை வெளியீடு

கொடிகாமம், மார்ச் 27

அன்புமயிலின் தயாரிப்பில் கந்தசாமி லோககாந்தன் இயக்கத்தில், சி.சுதர்சனின் இசையில் உருவான “மூச்சடங்கா இரவுகள்” முழுநீளத் திரைப்படத்தின் இசை வெளியீடும், யாழ்.தேவி கலைஞர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம அதிதியாக ராஜெஸ்டோன் தயாரிப்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தயாரிப்பாளர் சி.கந்தசாமி மற்றும் லோகேஸ்வரி கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25,159)




# டிறிபேக் கல்லூரியில் குருதிக்கொடை நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 27

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரை குருதிக்கொடை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்றும், அதில் பங்குகொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் உட்படக் கொடையாளர்கள் உரிய படிவத்தைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து கையளிக்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை விற்பனைக்கு

பலாலி றோட் உரும்பிராய் பகுதியில் 16 அடி அகலம், 37 அடி நீளமான கடையும், 12 அடி அகலம் 37 அடி நீளமான கடையும் உடனடியாக விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 077 123 5307, 077 151 0027

(cs.57838) (N-1)

## பெயர் மாற்றம்

சங்கானை வீதி, அச்சுவேலியை சேர்ந்த **நவராஜா நிக்சன் டிலீப்குமார்** ஆகிய நான் எனது பெயரை **டிலீப்குமார் நவராசா** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **டிலீப்குமார் நவராசா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

(cs.57835) (N-1) **டிலீப்குமார் நவராசா**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




22.03.2025 சனிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் **39 ஆவது பட்டமளிப்பு** வைபவத்தில் (BACHELOR OF BUSINESS MANAGEMENT ) (HONS in HRM) Gold Medalist பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட வவுனியா பல்கலைக்கழக மாணவி

**சாந்தகுமார் பிரதிசா**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் பல பட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : **குடும்பத்தினர்**

துரையன் செம்பாடு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

(cs.29624) (N-1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி

**பிரசாந்தி ஜீவரஜீபன்**

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் **39 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் கலை மாணிபட்டத்தை** பெற்ற எமது மகள் பிரசாந்தி அவர்களை பாராட்டி அகமகிழ்வதோடு மேலும் பட்டங்களைப் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : **அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் குடும்பத்தினர்.**

(cs.57839) (N-1)

தமிழரசுக் கட்சியின்

# நிர்வாகச் செயலரின்மகள் சுகவீனத்தால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

சட்டத்தரணி ஆன் குலநாயகம் (வயது-31) திடீர் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். எக்ஸ்.குலநாயகத்தின் மகளான அவர், திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் முழுமையான விவரங்கள் வெளியிடப்படும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-26)

# கிழக்கில் தீவிரவாதக்குழு விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, மார்ச் 27

கிழக்கு மாகாணத்தில் செயற்படும் முஸ்லிம் தீவிரவாதக் குழு குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளைத் தொடர்ந்து அந்தக் குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் செயல்படும் தீவிரவாதக் குழு குறித்து பாதுகாப்புப் படையினர் மிகுந்த விழிப்புடன் உள்ளனர்.

இந்தப் பகுதியில் செயற்படும் ஒரு முஸ்லிம் தீவிரவாதக் குழு குறித்து தகவல் கிடைத்துள்ளது.

இந்தக் குழு பற்றிய கூடுதல் விவரங்களைக் கண்டறிய பொலிஸார், புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்புப் படைகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# கோப்பாய் பகுதியில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோப்பாய் சந்திக்கு அருகாக உள்ள வாய்க்காலுக்குள் இருந்து நேற்றுச் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் அல்லர் என்றும், யாசகம் பெறுபவராக இருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தச் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27-26-25-17)



திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகதின சகஸ்ர சங்காபிஷேக மணவாளக்கோல உற்சவம் கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# தந்தை செல்வா ஜெயந்தி நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 27

தந்தை செல்வாவின் 127ஆவது ஜெயந்தி நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்கேற்கும் யாழ். இந்திய முன்னாள் துணைத்தூதுவர் ஸ்ரீமான் ஆ. நடராஜன் நினைவுப்பேருரையை ஆற்றவுள்ளார். (ச-41-113)

## வீடு வாடகைக்கு

யாழ்நகர மத்தியில் கௌரவமான சூழலில் மூன்று அறைகளைக்கொண்ட வீடு வாடகைக்குண்டு.

077 674 9496

(cs.57842) (N-1)

## கட்டம் வாடகைக்கு உண்டு

நகரின் மத்தியில் அலுவலகக்கட்டிடம் வாடகைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

076 949 2153

# ஜோன்ஸ்டன் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 27

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சதொச ஊழியர் குழுவொன்றை அரசியல் பணிகளில் ஈடுபடுத்தி அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அவர்களுக்கு எதிராகவழக்குத்தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புத்தூர் கனகம்புளியடிச் சந்தி பிரதான வீதியில் (பண்றித்தலைச்சி அம்மன் வீதி) மருதடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் பிரதான வீதியைமுகப்பாக கொண்ட 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. **(தரகர் தேவையில்லை)**

Whatsapp:- +3934 823 60063 (செல்வரஞ்சினி)

இலங்கை நேரம்: 7.00 p.m - 10 .00 p.m

(cs.57837) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தந்தை செல்வா’ விருது வழங்கல்



யாழ்ப்பாணம், மார்ச் 27
தந்தைசெல்வாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண தந்தைசெல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் ‘தந்தை செல்வா’ விருது வழங்கும் நிகழ்வு வலிகாமம் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சட்டத்தரணி இ.வசந்தசேனன், சட்டத்தரணி சிவபால சுப்பிரமணியம், சென்.ஹென்றி கல்லூரி அதிபர் ஆரோக்கியநாதர் மைக் மயூரன், யாழ். கல்லூரி அதிபர் கிளாடிஸ் நிர்மலா முத்துராஜா , அழகிரி சூரியகுமார், செபஸ்தியாம் பிள்ளை அன்ரன் நவராஜா, துரைராஜா தேவராஜா , காட்டுப்புலம் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் த. துஷ்யந்தன் , பன்னாகம் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் பு. விமலன், வட்டு இந்து வாலிபர் சங்க உறுப்பினர் தவராஜா நவீந்திரன், என். பாலேந்திரா, சங்கானை கூட்டுறவுச் சங்கத் தலைவர் பரமநாயகம் கேசவதாசன், எஸ்.ரவிசங்கர், பிரான்பற்று கலைமகள் வித்தியாலய ஆசிரியர் சோதிநாதன் ஹரீ கிருஸ்ணா , ந. நளாயினி , முன்னாள் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தவரஞ்சன் சசிகரன் ஆகியோர் தந்தை செல்வா விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் இதன்போது கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்குக் கண்ணாடி மற்றும் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு உலர் உணவு, அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று மன்றப் பொதுச் செயலாளர் எஸ். கே.தளையரட்ணம் தெரிவித்துள்ளார். (ச-25)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலைய முறைகேடுகளை கட்டுப்படுத்தவேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் கோருகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

**யாழ்ப்பாணம், மார்ச் 27**

**தொண்டைமானாறு தேசிய வெளிக்களநிறுவனத்தின் முறைகேடுகளையும், மோசடிகளையும் வடக்கு மாகாண ஆளுநர் கட்டுப்படுத்தவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மோசடி நிறைந்த நிறுவனத்தை பாடசாலைகளில் செயற்பட அனுமதிப்பது தவறான செயற்பாடுகளை ஊக்குவிப்பதாகவே அமையும். ஊழல் முறைகேடுகளை, மோசடிகளைக் கண்காணிக்கும் வகையிலும், கட்டுப்படுத்தும் வகையிலும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் செயற்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், வடக்கு மாகாணக் கல்வியில் மிகப்பெரும் பங்காற்றிய தொன்மையான நிறுவனம். ஆனால் அந்த நிறுவனம் தற்போது அதன் பிரதான நோக்கங்களைச் சிதைத்து வியாபார நோக்கத்துடன் மட்டும் செயற்படுவதுடன், நிதி முறைகேடுகளிலும் ஈடுபடுவது நீங்கள் அறிந்ததே. அந்த நிறுவனத்தின் யாப்பின்படி வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரே காப்பாளராகச் செயற்பட்டிருக்கின்றார்.

ஆனால் பழைய யாப்பின் முறைமைகள் அனைத்தும் முறையற்ற விதத்தில் ஊழல்வாதிகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த நிறுவனம் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தையோ, கல்வி அமைச்சையோ சாராத வர்த்தக நோக்கத்தை மட்டுமே இலக்காகக் கொண்ட நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதியிலிருந்து மே மாதம் 23ஆம் திகதிவரை பாடசாலைகளில் தரம் 12, 13 மாணவர்களுக்கு பரீட்சைகள் (கட்டணம் அறவிட்டு) நடத்துவதற்கு நேர அட்டவணை வெளியிட்டுள்ளது. இந்தக் காலப்பகுதி 2025ஆம் கல்வியாண்டுக்கான கற்றல், கற்பித்தலுக்காக கல்வியமைச்சால் ஒதுக்கப்பட்ட வருடாந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவேண்டிய காலப்பகுதியாகும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகளும் நடைபெறுகின்றன.

மோசடிகள் நிறைந்த நிறுவனம் ஒன்று பாடசாலைக் கற்றல், கற்பித்தலுக்கான நேரத்தில் தனியார் பரீட்சைகளைக் கட்டணம் அறவிட்டு நடத்துவதற்கு நேரசூசி வெளியிட்டுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் அதைக் கண்டுகொள்ளாது செயற்படுவது மோசடிகளுக்குத் துணைபோகும் செயற்பாடாகவே எம்மால் அவதானிக்க முடிகின்றது.

நீண்டகாலமாக நடைபெறும் இந்த நிறுவனத்தின் முறைகேடுகளையும், மோசடிகளையும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் கட்டுப்படுத்த வேண்டும்- என்றுள்ளது. (ஏ-100)

# அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி, மார்ச் 27
எழுதுமட்டுவாழ் செட்டிகேணி நாச்சிமார் கோவில் அலங்காரத் திருவிழா அடுத்தமாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 11 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெற்று தீர்த்தத்திருவிழாவுடன் நிறைவுபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச- 25,9)

# மஹோற்சவம்

வவுனியா கோவிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் மஹோற்சவம் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20 நாள்கள் நடைபெறவுள்ளது. அடுத்தமாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச 25)

# யாழ்.பல்கலையில்

## ‘நனோ’ தொழில்நுட்ப மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 27
தூயசக்தி மற்றும் சுகாதாரப் பயன்பாடுகளுக்கான அதிநுட்ப ‘நனோ’ திரவியங்கள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலான மூன்றாவது சர்வதேச மாநாடு இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நோர்வே நாட்டு உயர்கல்வி, ஆற்றல் அபிவிருத்தி இயக்குனரகத்தின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தாலும், இந்திய கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்தினாலும், மேற்கு நோர்வே பல்கலைக்கழகத்தாலும் இம் மாநாடு கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தூயசக்தி மற்றும் சுகாதாரப் பயன்பாடுகளுக்கான நனோ தொழில்நுட்பம் தொடர்பில் பணிபுரியும் சர்வதேச ஆராய்ச்சியாளர்களிடையே நனோ தொழில்நுட்ப அறிவியல் அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு முக்கிய தளமாக இவ் மாநாடு அமையும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரவிராஜன் மற்றும் மேற்கு நோர்வே பல்கலைக்கழக பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை ஆகியோர் மாநாட்டின் தலைவர்களாகச் செயற்படுகின்றனர். இம்மாநாடு இந்தியா, நோர்வே, அமெரிக்கா, ஜேர்மனி, மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 35 உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 160ற்கும் மேற்பட்ட சர்வதேசப் பங்கேற்பாளர்கள் உட்பட 350ற்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களை ஈர்த்துள்ளது. இலங்கையில் அமைந்துள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள அறிஞர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும் என மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-66)

# வவு. மாநகரசபை சோலைவரியை தேர்தலில் பின்னர் தீர்மானிக்கலாம்

## திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 27
வவுனியா மாநகரசபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்ட சோலைவரியைத் தற்போது செலுத்தத் தேவையில்லை. புதியசபை அமைக்கப்பட்ட பின்னர் அதன் தீர்மானத்துக்கு அமைய சோலைவரியைச் செலுத்தமுடியும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சோலை வரி கடந்த காலங்களில் அறவிடப்பட்ட தொகையைவிட சுமார் 7 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நகரசபைச் செயலாளரிடம் கேட்டபோது, கடந்த 15 ஆண்டுகளாக வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் சொத்துமதிப்பு இடம்பெறவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட சொத்து மதிப்பீட்டுக்கு அமைய வரி விதிக்கப்பட்டுள்ளது. சொத்து மதிப்பின் 15 வீதம் வரியாக அறவிடப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வரி வீதம் குறைவாகக் காணப்படுகின்றது என்றும், வவுனியா மாநகர சபையால் 15 வீத வரி அறவிடப்படுவது பெரும் சுமையாக உள்ளது என்றும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது மக்களது தலையில் வரிச்சுமையை ஏற்றாது. மாநகரசபைத் தேர்தலின்பின் வருகின்ற உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு அமைய வரி வீதத்தைத் தீர்மானிக்கமுடியும்.

நகரசபையின் நிலையான வைப்பில் 18 கோடி ரூபா உள்ளது. எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் திருநாவற்குளம், தாண்டிக்குளம் உள்ளிட்ட ஏனைய 10 வாட்டாரங்களின் வீதிகள் திருத்தப்படும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண சமூக நடவடிக்கை மையத்தின் மகளிர்தினம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக ஜப்பான் டோக்கியோ ககுஷு பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் மருத்துவர் மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் ராஜேந்திரா சுரேந்திரகுமரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## இந்திய முதலீட்டாளர்களை கைவிட்டால் மீட்சி இல்லை

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
இலங்கைப் பொருளாதாரமீட்சி மற்றும் வளர்ச்சியை அனுபவிக்க வேண்டுமானால் அதானி குழுமம் மற்றும் இந்தியாவின் பிற முதலீட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றவேண்டியது கட்டாயம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை - இந்திய முதலீட்டாளர்களை ஈர்க்கவும் அழைக்கவும் வேண்டும். அதானியுடன் பேச்சு நடத்தும்போது எமது அரசாங்கம் பல்வேறு வகையான மின்சார கொள்முதல் விலைகளை முன்மொழிந்தது.
புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்க ஆர்வமாக இருந்த பல முதலீட்டாளர்கள் அதானியின் வருகைக்குப் பிறகு தமது ஆர்வத்தையும் வெளிப்படுத்தினர்.
எமது பொருளாதாரத்தின் வளர்ச்சியை அடைய இந்தியா மற்றும் அதன் முதலீட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும்- என்றார். (ச-இ)






ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2024 ஆம் ஆண்டு உயர்நிலையில் தேர்ச்சி பெற்ற ரண் கெகுளு கணக்குகளுடைய பிள்ளைகளுக்கு இலங்கை வங்கியால் இம்முறையும்

மொத்தம் 30 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க
2,000 புலமைப்பரிசில்கள்

ரண் கெகுளு புலமைப்பரிசில் மற்றும் PFCA *Minor கணக்குகள் வைத்திருப்போருக்கான புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்

- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது PFCA *Minor கணக்குகள் மற்றும் வேறு சிறுவர் சேமிப்புக் கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது வேறு சிறுவர் சேமிப்புக் கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கில் 2025 ஜனவரி 22 ஆம் திகதிக்கு குறைந்தபட்ச மீதி ரூ. 5,000/- இற்கு குறையாதிருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற, 2,000 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)
- PFCA *Minor கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கில் 2025 ஜனவரி 22 ஆம் திகதிக்கு குறைந்தது 250 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்குச் சமனான வகையில் வெளிநாட்டு நாணயத்தில் பேணியிருக்க வேண்டும். (விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும், அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற 100 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)

விசேட பரிசுகளுக்கான தகைமைகள்

- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது PFCA *Minor கணக்குகள் மற்றும் வேறு சிறுவர் சேமிப்புக் கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய திகதிக்கு முன் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட்டில் இருந்திருக்க வேண்டும்.

- விண்ணப்பப் படிவங்களை BOC இணையத்தளம் மற்றும் கிளைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடிவதோடு, மேற்படி தகைமையுடையவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தோடு பரீட்சைப் பெறுபேறு சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளிக்கலாம்.
- விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 2025 ஏப்ரல் 11 ஆகும். அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*2017 நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன் NRFC Minor / RFC Minor / RKFC என்ற பெயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்குகள்

1975 BOC
www.boc.lk
AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# பிரிட்டனின் தீர்மானத்தை இலங்கை ஏற்கவேகூடாது!

### சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
பிரிட்டன் விதித்துள்ள தடை ஒருதலைப் பட்சமானது. பிரிட்டனின் இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கவேண்டும் என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கும், விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் பிரிட்டன் தடை விதித்துள்ள நிலையில், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
விடுதலைப்புலிகள் அமைப்பை இலங்கையில் இல்லாதொழித்தாலும் அந்த அமைப்பின் கொள்கையைக் கொண்டவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இன்றும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பிரிட்டனில் வாழ்கின்றனர்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஊடாக பிரிட்டன் இலங்கைக்கு எதிராகப் பல தீர்மானங்களைக் கொண்டுவந்தது. இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை கொண்டு வரும் நாடுகளுக்கு பிரிட்டன் முழுமையாக ஆதரவளித்தது.
தற்போது பிரிட்டன் எடுத்துள்ள தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கவேண்டும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை இலங்கைக்கு எதிரானதாகவே அமையும். சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டு செல்லும் செயற்பாடுகள் மறைமுகமாக முன்னெடுக்கப்படுகின்றன.
இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** உடல் நலனில் கவனம்செலுத்தவேண்டிய நாள். சிலருக்கு திடீர்ப் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சக பணியாளர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**துலாம்:** மனதில் வீண்குழப்பங்கள் தோன்றி மறையும். ஆனால், புதிய முயற்சி சாதகமாக முடியும். உடல் நலனில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிப்பதால் மனதில் சோர்வு உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். காரியங்கள் இழுபறியாக முடியும். எதிர்பாராத செலவுகளால் மனச் சஞ்சலம் உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிறுசிறு வாக்குவாதம் ஏற் படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

குயின்டன் டி ஹொக் அபாரம்

# நடப்புச் சம்பியன் வெற்றிக் கணக்கு



**ஹவ்காத்தி, மார்ச் 27**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், மொய்ன் அலி மற்றும் வருண் சக்கரவர்த்தியின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும், குயின்டன் டி ஹொக்கின் அபாரமான ஆட்டமும் கைகொடுக்க ராஜஸ்தானைத் தோற்கடித்தது கொல்கத்தா.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ஜெய்ஸ்வால் மற்றும் சாம்சன் இருவரும் களமிறங்கினார்கள். சாம்சன் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜெய்ஸ்வால் மற்றும் ரியான் பராக் இருவரும் அணியை மீட்பதற்குப் பெரும் பாடுபட்டபோதிலும் அந்த முயற்சியில் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை.

25 ஓட்டங்களுடன் ரியான் பராக்கும், 29 ஓட்டங்களுடன் ஜெய்ஸ்வாலும் ஆட்டமிழந்தனர். ஜூரல் மத்திய வரிசையில் பெற்ற 33 ஓட்டங்களே அதிகபட்சம். முடிவில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

அரேரா, ரணா, வருண் சக்கரவர்த்தி மற்றும் மொய்ன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர் மொய்ன் அலி 5 ஓட்டங் களுடன் ஏமாற்றினார். எனினும், குயின்டன் டி ஹொக் எந்தப் பதற்றமும் இல்லாமல் அணியை வெற்றிப் பாதையை நோக்கி நகர்த்திச் சென்றார். ரகானே 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், டி ஹொக் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிபெற வைத்தார். (ம)






## குருதிக்கொடை

*யாழ்ப்பாணம், மார்ச் 27*

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 23 ஆவது புனருத்தா ரண ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்த தான முகாம், இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. கொடையாளர்களை குருதி வழங்கி உயிர்காக்க உதவு மாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (சு-25)


# மரண அறிவித்தல்



**சட்டத்தரணி ஆன் சுமங்கலா குலநாயகம்**

நெடியகாடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும் மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம் (பழைய மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) நேற்று (26.03.2025) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சேவியர் குலநாயகம் - தேவஜோதி தம்பதியரின் அன்பு மகளும், ஜோசப் தர்மர், ஜேம்ஸ் நிமலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மிலோனின் இன் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**36, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பேசி: 077 883 1444
077 489 6306**

(CR 44680) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

மானது வரை மழை கிடைக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வங்காளவிரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு அண்மையாகக் காற்றழுத்தத் தாழ்வுநிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது எதிர்வரும் 5ஆம் திகதியளவில் தாழமுக்கமாக வலுப்பெற்று மேற்கு, வடமேற்குத் திசை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும், இதன் நகர்வுப்பாதை மற்றும் கரையைக் கடக்கும் இடம் தொடர்பில் அடுத்த சில நாள்களின் பின்னரே உறுதிப்படுத்தமுடியும். சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் இதனைக் கருத்திற்கொண்டு செயற்படுவது சிறந்தது. அதேவேளை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். ஆதலால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது - என்றுள்ளது. (அ-ம-66)

## இராஜதந்திரத்...

தெரிவித்ததாவது:-

இலங்கையின் இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கு எதிராகப் பிரிட்டனால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை பாரதூரமானது. இந்தத் தடை உண்மையான விசாரணைகளுக்கு அமைய நடத்தப்படவில்லை. கனேடிய நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியே ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராகப் பிரிட்டன் பிறப்பித்த தடைகளின் பின்னணியில் உள்ளார்.

போரின்போது ஒரு தரப்பில் இருந்தவர்கள் மீதே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்குள் புலித்தலைவர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவரின் பெயர்கூட பிரிட்டனின் தடைப்பட்டியலில் இல்லை. கனடாவின் புதிய நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இன அழிப்பு இடம்பெற்றதாக கனேடிய நாடாளுமன்றில் பிரேரணை சமர்ப்பித்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய அரசியல்வாதியாவார்.

அவர் இவ்வாறு செய்து சில வாரங்களுக்கு பிறகுதான் பிரிட்டனும் இந்தத் தடைகளை அறிவித்துள்ளது. கனடாவும் பிரிட்டனும் மிகநெருங்கிய நட்புநாடுகள் என்பதால், அவை இணைந்து இலங்கைக்கு எதிராகப் பனிப்போர் நடத்துகின்றன. எனவே, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவரை அரசாங்கம் அழைத்து விடயத்தைத் தெளிவூட்ட வேண்டும் - என்றார். (அ-ம-44)

## வாக்குகளுக்கான...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் முன்னாள் படைத்தளபதிகளுக்கு எதிராக தடைகளை விதிப்பதாக பிரிட்டன் அறிவித்துள்ளது. இந்தத் தடைகளை விதிப்பதற்காக பிரிட்டனால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் தவறானவை என்பதுடன், அவை ஆதாரங்கள் இல்லாதவையுமாகும்.

புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுப்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நானே அப்போது முடிவெடுத்தேன். அந்த முடிவை பாதுகாப்புத் தரப்பினர் செயற்படுத்தினார்கள். 2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் விடுதலைப்புலிகள் 363 படுகொலைகளைப் புரிந்துள்ளனர். 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் புலிகளின் தாக்குதல் உக்கிரமடைந்தது. இப்படித் தாக்குதல்கள் நடந்தும், சமாதானமே வேண்டும் என்பதற்காக ஜெனிவா மற்றும் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுகளில் எமது அரசாங்கம் பங்கேற்றது. இவற்றை புலிகள் ஒருதலைப்பட்சமாக நிறுத்தினர்.

2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் கெப்பற்றிக்கொலாவத் தாக்குதலில் 64 பேர் உயிரிழந்தனர். 86 பேர் படுகாயமடைந்தனர். 2006ஆம் ஆண்டு ஜூலையில் மாவிலாறுவை புலிகள் மூடினார்கள். நீர்விநியோகத்தைத் தடுத்தனர். இதனையடுத்தே இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரை முன்னெடுத்தோம்.

போரின்போது பெருமளவு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என பிரிட்டனால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றேன். புலிகளுக்கு எதிராகவே நாம் போர் செய்தோம். தமிழ் மக்களுக்கு எதிராக போர்செய்யவில்லை என்பதைத் தெளிவாகக் கூறுகின்றோம். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது இராணுவத்தளபதியாக இருந்த பொன்சேகா தேர்தலில் போட்டியிட்டார். அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. வடக்கு, கிழக்கில் 60 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். இதன்மூலமும் பிரிட்டனின் குற்றச்சாட்டுகள் போலியாகின்றன.

அதேவேளை புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி பின்னர் ஜனநாயக வழிக்கு திரும்பிய கருணாவுக்குத் தடை விதிக்கப்பட்டமையானது, புலிகளுக்குச் சார்பான புலம்பெயரிகளைத் திருப்திப்படுத்தும் செயலாகும் என்பது தெளிவாகின்றது. 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர், இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரினார். அதனை நான் நிராகரித்தேன் - என்றார். (அ-ம-44)

## தென்னக்கோன்...

மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பதில்பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கக்கோரும் பிரேரணை, 115 எம்.பி.க்களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பில், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று விளக்கமளித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவிநீக்கம் செய்ய கோரும் பிரேரணை முதலில் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெறும். ஐந்து நாள்களுக்கு பிறகு ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றம் கூடும் முதல் சந்தர்ப்பத்தில் அதாவது ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் விவாதிக்கப்பட்டு பிரேரணை நிறைவேற்றப்படும்.

அதன்பின்னர் மூவரடங்கிய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்கமைய, பதவி நீக்கக்கோரும் பிரேரணை மீண்டும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் - என்றார். (அ-ம-44)

## 11 தரப்பினர்...

மன்னார் மாவட்ட தேர்தல் ஆணையாளரும், மாவட்டச் செயலருமான கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக, மன்னார் பிரதேசசபைக்கான தேர்தல் தாமதமாக இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்த நிலையில், நேற்றுவரை 11 தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில், ஒரு சுயேச்சைக் குழுவும் இரண்டு கட்சிகளும் வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளன. வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் அவகாசம் இன்று நண்பகலுடன் முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## 10 தரப்புகள்...

தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக, கிளிநொச்சி பிரதேசசபைக்கான தேர்தல் தாமதமாக நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்த நேற்றுவரை அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில், 10 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. அவற்றில் 6 தரப்புகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இன்று நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## குடும்பப்பெண்...

குடும்பப் பெண் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கமல் நகுலமலர் (வயது-44) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீதியால் சென்றுகொண்டிருந்த அவரை மஹேந்திரா வாகனமொன்று நேற்றுமுன்தினம் மோதியுள்ளது. இதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அன்றையதினம் இரவே (நேற்றுமுன்தினம்) உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அரச...

பாணம் நகரை நோக்கி நகர்ந்தபோது, பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு மாணவர்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, திருநெல்வேலிச் சந்தியில் போராட்டம் இடம்பெற்றது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்ததாவது:-

தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து தாதியியல், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் ஆகிய பதவிநிலை வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்களை உள்ளீர்ப்பதற்காக அரச பல்கலைக்கழகங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பொது உளச்சார்பு பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பாடப்பெறுமதிக்கான தரப்புள்ளி சுட்டெண் (ஜி.பி.ஏ.) அடிப்படையிலேயே நிரப்பப்பட்டது. ஆனால் தற்பொழுது ஜி.பி.ஏ. சுட்டெண்ணைக் கொண்டிருக்காதவர்களும், தகுதியற்றவர்களும்கூட இந்த வேலை வாய்ப்பில் இணைத்துக்கொள்ளப்படச் சாத்தியங்கள் உருவாகியுள்ளன - என்றனர். (அ-ச-125)

## விபத்தில்...

முதியவர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

ஏரம்பு தட்சணாமூர்த்தி (வயது-75) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

வீதியால் நடந்துசென்ற அவரை கடந்த 16ஆம் திகதி அதிகவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியுள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுக் காலை சிகிச்சையின்போது உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அரசமட்டப்...

மட்டப் பேச்சுகளை நடத்தவேண்டும் என்று இருதரப்பு மீனவர்களும் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களால் இடம்பெறும் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும், தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடி தொடர்பிலும் இருதரப்பு மீனவர்களின் உறவிலும் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தப் பதற்றங்களுக்குத் தீர்வைக் காண்பதற்காக, இந்திய மீனவர்கள் குழுவொன்று இலங்கைக்கு வருகைதந்த நிலையில், அவர்களுக்கும் இலங்கையின் மீனவ சங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இதன்போதே, இருதரப்பு மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கடற்பதற்றத்துக்குத் தீர்வுகாண்பதற்காக அரசமட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்று விருப்பம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, இழுவைமடிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடி நிறுத்தப்படவேண்டும் என்பதை இந்திய மீனவப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், உடனடியாக அல்லாமல் படிப்படியாக அதை நடைமுறைப்படுத்துவது என்று அவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர். இதற்கு ஈழ மீனவர்களின் பிரதிநிதிகள் மறுப்புத் தெரிவித்ததுடன், அத்துமீறிய மீன்பிடியை உடன் கட்டுப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தினார்கள்.

(அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE WORLD VICTORY MUST

# NEW SCIENCE WORLD
## கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

## A/L 2027 Batch
### Tamil & English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் **Zoom** இன் ஊடான வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பௌதீகவியல் | - | திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| இரசாயனவியல் | - | திரு. டயஸ்<br>திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் | - | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் | - | திரு. S.S. செந்தில்ராஜ்<br>திரு. V.ஹரிகரன் |
| ICT | - | திரு. T.லவேந்திரன் |

**ஆரம்பம் :- 09.04.2025 (புதன்கிழமை)**
**நேரம் :- காலை - 9.15 மணி**

**அனுமதிகளை 01.04.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக விபரங்களுக்கு :-
**021 221 6690, 077 336 4055**

**New Science World**
Navalar Road, Brown Road,
Junction, Jaffna.
(cr.44675) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1936



மறைவு 25 . 03 . 2025

## ஜெகநாதன் மகேஸ்வரி

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் மகேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம்(25.03.2025)செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-கண்மணி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜெகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, ஆறுமுகராஜா ஆகியோரின் சகோதரியும், சுலோஜனா, ஜெகரஞ்சனா, நளினா, மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானசம்பந்தன், சிவபாலன், ராஜன், கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனார்த்தனன் - காருண்யா, ஜனகன் - வைஸ்ணவி, ஜனரஜீவன் - ஜனுஷா, குகரஜீவன் - ஜனனி, வேனுஜா - பிரகலாதன், பாரதிபிரியா, அமுதநிலா, யதுஷா, யாதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிரன், ஆதிரை, ஆகீஷன், ஆருக்ஷன், அன்புமதி, அஹிஷாயினி, அத்விகா ஆகியோரின் அன்பிற்குரிய பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மூத்தநயினார் கோவிலடி,**
**ஆனைக்கோட்டை வடக்கு,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 529 0257**
**076 675 0587**

# ஆதரவற்ற குழந்தைகள்; தரவுகளைத் திரட்டுங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு விசேட கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு சரியான தரவுகளைச் சேகரிக்குமாறு சிறுவர்கள் நன்நடத்தை திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரை வடக்கு மாகாணத்தில் 600க்கு மேற்பட்ட பிள்ளைகள் இந்தத் திட்டத்தினூடாக பயன்பெறுகின்றனர். எனினும் ஏராளமான பிள்ளைகள் இந்தக்கொடுப்பனவுப் பட்டியலில் உள்ளீர்க்கப்படாதுள்ளனர். அவர்களையும் அடையாளங்கண்டு தரவுகளைச் சேகரிக்கவேண்டும். இதனூடாகப் பேரன் போர்த்திகளுடன வாழும் பிள்ளைகளும் நன்மையடைவர் - என்றார். (ச-125)

## Vacancies

- Office Admin,
- Accounts clerk,
- Marketing Executive,
- Marketing Manager

(Basic 50,000/= - 90,000/=)
Contact
**077 996 9661**
(CS/2817) J-1

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- Whatsapp:- **0044 740 537 3526**
(CS/57780) J-1

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

## தொழிநுட்பப் பிரிவு
# A / L 2027

- **ஆரம்பம் - 30.03.2025** ஞாயிற்றுக்கிழமை
- **நேரம் - காலை 8.30 am**

**A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

தொடர்புகளுக்கு: **077 017 5346**
(cr.44674) (N-1)

## சலுகையில்...

உணவுப்பொதிகளை சலுகை விலையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய உணவுப்பொதியை 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## பிரிட்டனின்...

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர், போர்க்குற்றங்களைப் புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா மற்றும் ஜகத் ஜெயசூரிய, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராக பிரிட்டனால் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படுத்தியுள்ளார். இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

பிரிட்டனின் தடையானது தவறானது என்பதுடன், இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பாக அமையாது. மாறாக இது இலங்கையில் சிக்கலையே தோற்றுவிக்கும். பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் தேசியப் பொறிமுறையைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. மேலும் கடந்தகால மனித உரிமைமீறல்கள் உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் முறைமையால் கையாளப்பட வேண்டும் என்பதிலும் அரசாங்கம் உறுதியாக உள்ளது - என்றார். (அ-ம-44)

## விற்பனைக்கு

அறுவடைக்கு தயாராகவுள்ள **பாணி புகையிலை** (தோட்டு வெட்டு) 6500 கன்றுகள் விற்பனைக்கு. மேலதிக விபரங்களுக்கு
**076 287 8157**
(CS/2819) J-1

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**(கிணற்றுடன்)** - tube well,
**நல்லூர் கோவில் 1.7** Km,
**கல்வியங்காடு சந்தி 350** m
**077 185 4870**
(cs.57840) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.